[1974 மார்ச் 20

கீழ்ராங்கியம் கிராமம்

* 519 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ராங்கியம் கிராமத்தை வெள்ளி விழா கிராமமாக எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அங்கு பள்ளிக்கூடம் கட்டும் திட்டம் ஏதேனும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) பள்ளிக்கட்டிடம் கட்டும் பணி, 1973-74-ல் கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

Tanks near Nidamangalam

* 520 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of fish were killed due to poisoning of the tank waters at Edakizhayur and Kallumangalam near Nidamangalam in Thanjavur district about the 25th March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 24—3—1973 அன்று ஏரியில் 'ஸ்டார்டின்' என்ற நச்சு மருந்து கலந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இதன் விளைவாக மீன்கள் இறந்து காணப்பட்டன. வடுவூர் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரால் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை செய்யப்பட்டு, சப்-மாஜிஸ்டிரேட் இது சம்பந்தமாக மூவருக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

திரு. என். டென்னிஸ் : இவ்வித சம்பவங்கள் ஏற்படாதவாறு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?